நகராட்சி நிர்வாக ஆணையரகம்,
சென்னை – 28.

<u>சுற்றறிக்கை</u>

<u>ந.க.எண். 5304/2021/ஆர்2</u> <u>நாள்:16.03.2021</u>

<u>பொருள்:</u> குத்தகை – உள்ளாட்சி அமைப்புகள் – மாநகராட்சி /நகராட்சிகள் பொது ஏலம் மற்றும் ஒப்புந்தபுள்ளி நடவடிக்கை மேற்கொள்ளுதல் – தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2021 – நடத்தை விதிகள் நடைமுறைக்கு வந்தது – தெளிவுரை வழங்குவது – சம்பந்தமாக.

<u>பார்வை:</u> நகராட்சி ஆணையர்களிடமிருந்து பெறப்பட்ட தெளிவுரைக் கோரும் கடிதங்கள்.

****

மாநகராட்சி/நகராட்சிகளுக்கு சொந்தமான கடைகள் மற்றும் நிலங்கள் ஆகியவற்றை அரசாணை(நிலை) எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை, நாள்:03.07.2007–ன் படியும் அங்காடிகள் பேருந்து நிறுத்தங்கள், சந்தைகள், சைக்கிள் நிறுத்தங்கள் கட்டண கழிப்பிடங்கள், தங்கும் விடுதிகள் போன்ற கட்டணங்கள் வசூலிப்பதற்கான உரிமம் அரசாணை (நிலை) எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை, நாள்:19.09.2008–ன் படியும் குத்தகைக்கு விடப்பட்டு வருகின்றன.

தற்போது அவ்வாறு குத்தகைக்கு விடப்பட்டுள்ள இனங்களில் 31.03.2021 உடன் குத்தகை காலம் முடிவடையும் இனங்களுக்கு தேர்தல் நடத்தை விதிகளின்படி குத்தகைக்கு விடப்படுவது குறித்து தெளிவுரை வழங்குமாறு கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன.

எனவே, 06.04.2021 அன்று சட்டமன்ற தேர்தல் நடைபெறுவதாகஅறிவிக்கப்பட்டுள்ள நிலையில் மாநகராட்சி/நகராட்சிகளில் பொது ஏலம் மற்றும் ஒப்புந்த புள்ளி நடவடிக்கைகள் தேர்தல் நடத்தை விதிகள் முடிவுறும் காலம் வரை நிறுத்தி வைக்கவும், அவ்வினங்களை தற்போது ஏலம் எடுத்து நடத்தி வரும் குத்தகைதாரர்களே தொடர்ந்து நடத்தவும், அவர்களிடமிருந்து ஏற்கனவே வசூலித்து வரும் தொகையினை வசூலிக்குமாறும் அறிவுறுத்தப்படுகின்றது.

மேலும், முந்தைய குத்தகைதாரர்கள் குத்தகை இனங்களை தொடர்ந்து நடத்த விரும்பாத இனங்களில் துறை மூலம் வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சுற்றறிக்கையினை பெற்றுக் கொண்டமைக்கான ஏற்பளிப்பினை உடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

ஒம்/– கா.பாஸ்கரன்
நகராட்சி நிர்வாக ஆணையர்

**பெறுநர்**

1. அனைத்து மாநகராட்சி ஆணையர்கள்
2. அனைத்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள்
3. அனைத்து நகராட்சி ஆணையர்கள்

**நகல்**

1. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
   நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
   சென்னை – 9.
2. இயக்குநர்,
   உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை,
   குறளகம், சென்னை – 9.
3. ஆர்–2, இருப்பு கோப்பு,
   உதிரி – 20.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

கண்காணிப்பாளர்.

17-03-2021